உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவாருளிச்செய்த சாக்குசத்தியென்றுவழங்கும் கன்மசூத்திரம்-௱௫௰.

சூதமுனி நாடி-௯௰.

ராஜாங்கநாடி-௨௫.

இஃது
மதுரை புதுமண்டபம், புக்ஷாப்,
மூ. கருப்பணை பிள்ளை,
அவர்களால்

பரப்பிரம்ம முத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது

1902.

சென்[illegible]தொட்டிக்கலைகுமரப்பமுதலிவீதி
2-10 - வது, நெம்பர்வீடு.

சிவமயம்.

[illegible]

[illegible]

காமதேந்திரம் - நாடகம்

(*)

காப்பு.

[illegible] ...போற்றி [illegible] ...மைம்பான் [illegible] ...போற்றி [illegible]

[illegible] செய்ய.

[illegible]

[illegible]

[illegible]

மாட்டார், தன்மத்தில்மனஞ்செல்லாது சண்டாளரீ சத்தோர்கள், துன்மத்திலழுந்திமாதர் கூடழிந்தேகுவாரே. ௫

நூல்பெருமை.

வாறுகேள்முன் னூலாய்ந்து வடமொழி தமிழாய்ச்செய்தேன், நூறுபத்தன்பதுக்குள் நிகருள்ள நூலொன்றில்லை, யீறுள்ளவினைகளோட்ட வெகுசுருக்குடனேதானுங், கூறுகேள்போதிகைவாழுங் குறுமுனிகூறநூற்றேன். ௬

தன்மம்செய்யாதவர்.

தன்மந்தான்மிகுந்தால்செய்யுங் காரியமேதோவென்னில், துன்மகதான்முதலாயுள்ள வியாதிகள்கூடிக்கொல்லும, வன்மந்தானுறப்பில்தோஷம் வந்திடும்வறுமைசூழும, தன்மந்தானில்லாமூடா சமைந்துமபின்னாகந்தானே. ௭

நரகம்விலக்கு.

நரகந்தானகலுஞ்சூட்சம் நாதாக்களுரைக்கமாட்டார், நரகந்தானகலுஞ்சூட்சம் நவிலுவேனுகமத்தில் நரகந்தானகலுஞ்சூட்சம நவிலுவேனன்றாய்க்கேளு, நரகந்தானகலுஞ்சூட்சம்காட்டினில்புகலொண்ணாதே

ஞானநாதாக்களுறுதியாய்சொன்னசூட்சம் ஞானநாதாக்கள்கொளாசெய்யாதொழிந்தசூட்சம்

ஒன்றான சிவனான் றன்மையவட்குரைத்த சூட்சம்,
ஒன்றான சூட்சங்கண்டா லொழிந்திடும் வினைகள்
தானே. ௭

நூல்களை ஆராய்ந்துபார்க்க.

வினையொழி சூட்சந்தன்னை விபரமாய்காணவே
ணும், வினையொழிசூட்சந்தன்னைக் கருவினால்காண
வேணும், வினையொழிசூட்சந்தன்னை மெய்யினால்கா
ணவேணும், வினையொழி சூட்சங்காண நூல்களைவி
ரைந்துபாரே. ௮

பாருநீபூரணத்தி னூல்கள்பற்பலவுங்காணே, கா
ருநீகொங்கணர்சொன்ன கடைக்காண்டமதனைப்பாரு
சி நடன்பிறவிநீரச் செபபினேன்சூட்சந்தன்னை; ஆரு
மேயறியச்சொன்னே மறிந்தவர்ஞானியாமே. ௯

பிரணவக் கவசம்.

ஞானமாஞ்சூட்சந்தன்னை நவிலுவெனாதவிந்து
மோனமாம் பிரணவத்தை முழுதுமே வளையக்கட்டி,
வானமாமவுனந்தன்னை வளைத்துநீசத்தியோடே,வன
மாம்நடுவேயேறிக் கலையினில்சூலமிட்டே. ௰

இட்டிடுஞ்சூலத்துக்கு இருபுறமெழுத்தைக்கே
ளு, விட்டதோரெழுத்தினோடேவிடாமெழுத்திரண்
டுஞ்சேர்த்து பட்டதோர்சூலத்தின்மேல்பகர்ந்திடச்
சத்தியிட்டு, அட்டமாமேசூட்ச மாமென்று அறிந்து
கொள்ளே. ௰௧

அறிந்திந்தச்சூட்சத்தன்னை அரித்தகட்னிற்கிறி,
செறிந்திடுமென்கோணமிட்டுத் திக்குப்பாலகரைவை
த்து, பிறிகநிடுவாசல்நாலுவளையமிரண்டென்றுபேசி
பரிந்திடுகவேசைகன்கந்தன் பத்திரகாளிப்பேரே. ௰௨

பாருநீவிசபாருமேதவரும்பரிவதானால், சேருநா
ல்வாசல்விட்டுச் செப்புறேன்தரையில்கேளு, காருநீ
சதுரமாகக் கருதியெண்விரல்தாழ்வாக, ஒருமேகுளி
க்களும்வொருநாள்குப்பமாமே. ௰௩

கும்பம் ஸ்தாபிக்க.

குப்பத்திணிறையத்தண்ணீர்சேரவேசுகந்தமிட்
டு, அம்புற்றஆடைசுற்றிஅதின்மேலேபஞ்சளப்பி, யி
ன்பமாவிலையுஞ்சாற்றி எலுமிச்சம்பழமூந்தேங்காய்,
நமபுவாய்மஞ்சள்பூசி வாயிலினடுவேவைவையே. ௰௪

வைத்துநீஅஷ்டகும்பம் வகையெல்லாம் வகை
யாய்த்தானே, வைத்துநீபெட்டுதிக்கும வகையதாய்பி
ன்புகேளு, பதநீசெந்நெல்தன்னைப் பரப்பியேகூட்
சமிட்டு, முத்திரீசொடுக்கவென்று முறையுடன்பதிக்
கமுக்கியம். ௰௫

உருசெபிக்க.

முக்கியமாகவென்றுமூல் முறைபது சொல்லக்கே
ளு, சக்கியஆதிவாரம் காலஸ்நானஞ்செய்து, சிக்கிய
வேரயம்வைக்கயஞ் சிறக்கவேலட்சத்திரு, முக்கியமாகச்
சூட்ச முறுவதுதாக்கிடாயே. ௰௬

தாக்கியசக்கரத்தில் கும்பந்தான் சத்திவைத்து,
நோக்கியவெழுத்தினோடே நய்யவோ ரெழுத்தாகுஞ்
சூட்சம், ஆக்கியவெழுத்தினாலே அகன்றிடும் வினைகளெ
ல்லாம், பாக்கியமாகச்சொன்னேனம்பகர்ந்திடும்பாவம்
போமே. ௰எ

கன்மந்திர அட்சரமெழுதிகட்ட.

போச்சுதுநோயாளிக்குப்பிடித்திட்டவினைகளெ
ல்லாம், ஆச்சுது அறிந்தானாலப்பனேமனதில்வைத்
து, எச்சுதுநோய்களென்று ஏங்கித்திரியவேண்டாம்,
காச்சுதுநோயாளிக்குக் கட்டிடக்கன்மம்போமே.

கன்மமே போகவென்றால் கொடும்பிணியாளர்தம்
ம்ம,நின்மமாஞ்சரீரசுத்திசெய்துமே[illegible]தன்
மமேமுன்னேவைத்து தான்சொன்ன முறைமையைச்செ
ய்து, நின்மலநீறுசாத்திருட்சத்தில்[illegible]மே.

நிவிர்த்தியாஞ்சூட்சத்துக்கு நிலை[illegible]பதீ
பம், சவிர்த்தியசாந்துபுட்பம்புழுகுடன்கஸ்தூரிசாற்
றி, அவிர்த்திபமாகும்வண்ணமா[illegible]ப்போ
ற்றி, உவர்த்திய பாவந்தீரேன் அன்பமையா யிருந்தி
டாயே. உ௰

இருந்திடும்வினைகளெல்லாஞ் சே[illegible],
அரிந்திடும் பிணிகளெல்லா மகன்றிடு[illegible]
ன், தெரிந்திடுமானாலட்சஞ் சொல்லிய [illegible]
மை,சரிந்திடுங்கடைக்குத்[illegible].

சாக்குசுத்தி.

ஒண்ணானசாக்குசுத்தி யொருவரு முறைக்கவில்
லைகண்ணானசாக்குக்கெல்லாங்கன்மமுந்தீராவிட்டால்
பண்ணானமருந்திற்சேர்த்துப் பருகிடப்பிணியாளர்க்
கு, நண்ணானசெந்தூரங்க ளுட்படும்நண்ணாதே.

லிங்கம்.

நண்ணாகச்சாக்குசுத்தி நவிலுவோம் லிங்கத்துக்
குப், பண்ணானபழச்சாறோடே பருகியபாலுங்கூட்டி
சண்ணாகமேனிச்சாறு மூன்றையுஞ்சமனாய்ச்சேர்த்து
சுண்ணாகலிங்கத்துக்குச் சுருக்கிடச்சுத்தியாமே.

வீரம்.

ஆச்சுதுவீரத்துக்கு அடைவுடன் சொல்லக்கே
ளு, பாச்சுதுஇளநீர்விட்டுப் பண்பாக அவித்துப்போ
ட்டு, வைச்சுதுகடுகைமூன்று உறபணங்கண்டுகொள்ளு
காச்சுதுஇளநீருள்ளே கழஞ்சிகற்பூரஞ்சேரே. உச

பூரம்.

சேர்த்திடுபூரத்துக்குவெற்றிலைமிளகுகூட்டி, கா
ய்ந்திடக்கியாழஞ்செய்து கியாழத்தில்மூணுநாள்வை,
வாய்ந்திடுகிழிபாய்கட்டி வைத்திடச்சுத்தியாச்சு, ஆர்
ந்திடுவெள்ளைசுத்தி அப்பனேஅறையக்கேளே.

வெள்ளைப்பாஷாணம்.

அறையுதேனைமுரிக்குள்ளே மிளகதையனைத்து
ப்போட்டு, வறையுதென்படிநாளொன்றும் வற்றவேக

ன்றுப்காய்ச்சி, உறையுறேன்விழியைவாங்கிக் கழுவி
யேயலர்த்திக்கொள்ளு,முறையுறேன்கெவுரிசுத்திமு
றையதுபகாக்கேளே, ௨௬

கெவுரி—குதிரைப்பல்லி.

கேளதுபண்ணிப்பாலில் விழியதுவாக்கட்டி,ஆ
ளதுகடிகையொன்று அவித்திடுநல்லசுத்தி, சாளது
திரைபல்லி சுத்தியின்குணத்தைக்கேளு, நாளதுகடி
கைமூன்று நாவினிலுமிரிசாலே. ௨௭

மனோசிலை.

உமிரிலூரப்போட்டு வுலர்த்திடச்சுத்தியாச்சு,
ஆமினிசிலையின்சுத்தி அப்பனேஅறிந்துகொள்ளு.தா
மினிக்கடிநாழி.தண்ணிலேவிழியைப்போட்டு, ஆமி
னிகடிகைமூன்று அவித்திடச்சுத்தியாமே. ௨௮

ஆமிதுபவளசுத்தி ஆவின்மோரிருநாழிக்குள்,தா
மினிவிழியாய்க்கட்டித் தாக்கிடுகடிகைமூன்று, ஓமிது
உலர்த்திப்போடுஉத்தமமநல்லசுத்தி, தாமிதுஅரிதா
ரத்தின் சுத்தியைக்கருதக்கேளே. ௨௯

அரிதாரம்.

கருதியஅமுரிநாழி கல்சுண்ணாம்கால்தாரும்,பரு
கியமேனிச்சாறுபடிய துகால்தாளுரும்,கருதிசேர்கடி
கையொன்று இருகலைக்கறுக்காய்க்காச்சிச், கருதியே
கலத்தில்சுத்தி செய்திட்டுவுலாத்திடாயே, ௩0

கலாசத்து—கல்நார்.

உலர்த்தியேசலாசத்துக்கு ஊறல்தான்போகக் கேளு, கலர்த்தியேபழச்சாறுதன்னில் காச்சியேயுல ர்த்திப்பின்பு, நலத்தியஎருக்கம்பாலி லூறவைநாளும ரெண்டு, கலர்த்தியேகழுவிப்போடு கல்நாரிணிசுத்தி வண்மை. ௩௧

கெருடபச்சை,

வண்மையாககழுதைநீரில் வாட்டிடுகடிகைமூன் று,கண்மையாய் பின்பெடுத்துக்கழுவியோவியில்போ ட்டுப், பண்மையாக்கெருடபச்சைப்பாஙிலைப்பகாக் கேளு, தண்மையாய் பயறுபோலே தட்டியேகிழியை கட்டிடே. ௩௨

சீனக்காரம்,

கட்டியேகுமரிசாற்றில் கடிகைமுப்பதுவேகாய் ச்சி, ஊட்டியேகழுவிப்பின்பு உலர்த்தியேவைத்துக் கொள்ளு, சட்டியாஞசீனக்கார சுத்தியின் சிறப்பைக் கேளு,ஆட்டியேஆவின்பாலி லூறவைஅதிகசுத்தி.

பொரிக்காரம.

சுத்தியாம்பொரிக்காரததுச் சுத்திதான் சொல்ல க்கேளு, புத்தியாய்கிழியாய்கட்டி எருமைசாணிச்சா ற்றில், வைததுமேகொதிகும்போதுவல்லமைசேர்கி ழிய ாககிப், பத்தியாய்சழுவிவைக்கக் குக்கிலிபகாக் கேளா. ௩௪

குக்கில்-சுந்தரிக்கம்—காரம்.

பகருவேன்எருமைமோரில பண்பதாயூறப்போடு, தகருவேன்குக்கிலிக்குஞ்சுத்தி சாறுவேன்சாராயத்தில், உருகவேன்ஊறப்போடு ஒருநாளில்சுத்தியாச்சு, முகருவேன்காரத்தாசுரூ மூத்திரமூன்றுநாளே.

கெந்தி.

மூன்றுநாள்தான் அவிக்கரூக்கியல்லசுத்தி, தாண்டவமாடுங்கெந்தி சுத்தியின்சார்புகேளு, ஏன்றஆவெண்ணெய்விட்டு இருப்புச்சட்டியிலுருககிப்பாலில், ஆன்றபிராஞ்சுதிராஞ்சாய்க்க அதிதமாய்சுத்தியாச்சே.

ரசம்.

ஆச்சுதரசத்தின்சுத்தி அறையுறே னடைவாய்த்தானே, போசசுதுபுகைக்கூராந்தான்மஞ்சளுஞ்செங்கல்தூளும், பாச்சுதுபொடிபிருப்பு போட்டுநீயரைத்துப்போடு, வாச்சுதுமேனிச்சாறுந தேனும்பிரண்டையுமாய்மத்தி. ௧௭

மத்தித்திப்பின்புகேளு மருவிய இஞ்சிச்சாறு, கொத்திறுவாரைப்பட்டை குறுகியவியாழந்தன்னில், சித்திரமூலச்சாறுசேர்த்துதைதிரிபலாதி, வத்தியவியாழந்தன்னில் மத்திக்கவளமைமோளே. ௧௮

கேளுநீஅமரிபோடுஅனார்க்குமெத்திமித்தி, நாளினில்நாகப்பட்டை நன்றாகவியாழஞ்செய்து, வாளினில்வெவ்வேறாவர்த்திகரவணிகமாகும், நாளினில்மதாளுக மஃதும்வெவ்வேறதாமே. ௧௯

ஆமினிவகைவகைக்கு அளவதாய்கொண்டுவந்து
தாமினிஒவ்வொன்றுசச் சலத்தினிற்கழுவிப்போட்டு
ஓமினிவாலேகுத மூறுகாணிக்தசுத்தி, நாமினிமுடிதா
ரத்தின் சுத்தியைகவிலக்கேளே. சுயி

முடிதாரத்தின்.

கேளுநீபனியின்கள்ளு கெடியதாய் படிநாலுங்
குள், வாளுநீசீழிபாய்க்கட்டி வைத்தெரிவளமையாகு
ம, வாளிதுகழுவிவைக்க வண்மையாய்நல்லசுத்தி, ஆ
ளிதுதாரசிங்கி அதினுடசுத்திகேளே. சுக

தாரசிங்கி.

அதினுடசுத்திவென்ன ஆட்டுநீர் தன்னில்காய்ச்
ச, வதனமாக்கொட்டிநாலு வரிசையை வளமாய்க்கே
ளு, சுதனமாமுலேப்பாலோடு சுத்தவெள்ளாட்டுப்பா
லும், பதனமாய்ஒவ்வொன்றுக்கு நாழிகை பத்துப
த்தே. சுஉ

தொட்டிபாஷாணம்.

பத்துபத்தாகலுமிப் பார்த்திடச் சுத்தியாகும்,
முத்துமுத்தானதொட்டி பாஷாணமுறையைக்கேளு
சத்துசத்தாகவெட்டி தாஞெருகிழியாயகட்டி, கொத்
துகொத்தாகநெல்லி லவி திட்டுகுறியைப்பாரே.

மடல்துத்தம்.

குறியென்னகழுவிப்போடு கூரியமடலின்சுத்தி
நறுவண்டேயதனிற்போட்டு நாள்ரெண்டுயூறிவாங்

தி, தெறிபடாதயிருக்குள்ளே செறித்திடுநாளொன்று
ந்தான், பிறிவென்னகுமரிசாற்றில் மஞ்சளின்சாற்றி
லேயூர்நாள். ௪௪

அருசி.

நாளொருநாளாயூறக் கழுவியேவுலர்த்திப்போடு
பாழொருநல்லசுத்தி பச்சையின்துரிசைக்கேளு, வா
ழொருபசுவினீரில் வைத்தெரிபடிநாளுக்குள், சிருட
ன்கழுவிவெய்யல் சிறப்புடன்வுலாவையே. ௪௫

சாத்திரபேதி.

வைத்திடச் சுத்தியாச்சு மருவிய சாஸ்திரபேதி,
கைத்திடுநாரத்தங்காய் சாறதினிலூரக்கண்டு, பத்தி
டக்கழுவிப்போட்டு பார்த்திடநல்லசுத்தி, நத்திடுமஞ்
சனக்கல் சுத்தியைநவிலக்கேளே. ௪௬

அஞ்சனக்கல்-நாகம்.

கேளப்பாபுளியினுரைச் சாறதினிலூறப்போட்
டு, நாளப்பாசென்றபின்பு நல்லதோர்சுத்தியாச்சு, வா
ளப்பாநாகசுத்தி மருவியேகேளுகேளு, தாளப்பாநல்
லெண்ணெய்க்குள் தானொருநாள்தானூருமே. ௪௭

தாம்பரம்.

நாளதாய்பழச்சாறுக்குள்நாழிகைஅறுபதாகும்
வேளதாய்கழுவிப்போட்டு வெய்யிலி லுலர்த்தச்சுத்
தி, கோளதாய்தாம்பரசுத்தி கூறுவோமின்னங்கேளு,

வேளதாய் அமுரியொன்று விளம்பிய பழச்சாறொ
ன்றே. ௪௮

சாறுடன்சாரங்கூட்டிதாளகந்தானுங்கூட்டி, வீ
றுடன்சலக்கியேதான்வெய்யிலில்பத்துநாள்வை, நீறு
டன்சமுனிப்போடு நிசமதாய்சுத்தியாச்சு, ஆறுடநாக
சுத்தி அறையுறேனறிந்துகொள்ளே. ௪௯

நாகம்.

கொள்ளவேஅமுரிதன்னில் கூட்டிடுகேல்லுச்சுன்
னம், உள்ளதுபழச்சாறோடுஉறவிடு உருவாய்சேர்த்து
அள்ளதநாகந்தன்னை ஆட்டுநெய்தனிலுருக்கு, உள்ள
துபததுசாய்க்க நறசுததியாகும்பாரே. ௫௰

பாருநீகாந்தஞ்சுத்தி பகருவேன்காணஞ்சாறதில்
ப்ருடன்காய்ச்சித்தோய்க்கச் சிறப்புட னேழுகாக,
வாருநீசமுனிவைகக வண்மையாய்நல்லசுத்தி, ஆநரீ
காரியதத்தின் சுத்தியை அறிவாய்கேளே. ௫௧

சருவங்கம்.

அறிவதுவெள்ளாட்டுநீர் அதினுடன் பிரண்டை
பின்வேர், சிறிவதுஅரைத்துப்போட்டுசிறக்கநல்லெ
ண்ணெய்குத்தி, குறியுடனுறுக்கிசசாய்க்கக் குணமு
டன்சீறுமாகு, மறிவதுநல்லசுத்தி அச்சுதுஅளருள்
ளோர்க்கே, ௫௨

பொன்னிமிளை அப்பிரேகம்.

உள்ளபொன் னிமிளைசுத்தி யுரைக்கிறே னுணர்
வாய்கேளு, கள்ளமாங்காடிக்குள்ளே காச்சிமூன்

அறுபத்திநாலுசாக்குசுத்தி,

சொல்லுவோமின்னங்கேளு சூட்சமாயேகமாக,
நல்லதோர்சாக்குசுத்தி விபரத்தைவிரித்துக்கேளு, ந
ல்லதோர்மேனிச்சாறு கல்லுறுதக்காளிச்சாறு, வல்ல
தோர்கையான்சாறு மதனைதயின்சாறுதானே, ௫௮

சாறுதான்பழச்சாறோடே தன்னுடனமுரிகூட்
டி, வாறுதான்காடிக்கூட்டி வைத்திட்டு மருந்துகேளு,
வீறுதான் உப்புசன்னம வெடியுப்புகாரஞ்சீனம், கூ
றுதான்பலமொன்றாகக் கூட்டிநீவைத்திடாயே, ௫௯

கூட்டியேவைத்துக்கொண்டு சாக்கறுபத்தினாலு
ம், நாடடியேகுழியாய்க்கட்டிகலமுடன்மணடலமவை
தாட்டியாய்சுத்தியாச்சு சாக்கறுபத்தினாலு, நாட்டினி
ர்சுத்திசெய்யர் வயித்தியம்நன்றுகாதே, ௬௰

அஷ்டலோகமாரணம்,

நன்றாகஅஷ்டலோக மாரணம்நவிலக்கேளு,பன்
றானஅஷ்டலோகத்துக்குப் பாச்சிடுகோராசாரம், வென
றாகுவீரமபூரம வெள்ளைவெடியுப்போடு, ஒன்றாச்ச
சமனாய்ச்சேர்த்து வழுத்தியாகொத்திச்சூதம், ௬௧

குதகாமுகுனைதுமைபல்லிக்குக்குட்டிடுசமனாய்நீயும்
வீருமாம்பழச்சாறிட்டுமத்தித்துப்பின்புகேளு, வே
துமான அஷ்டலோகம்விதமெல்லாந்தகடாய்த்தட்டி, எத
மாயிதை தகட்டிலப்பி சீலைசெய்து புடத்திலிட்டு கருக்கை தப்பூசே,

பூசியேயுலாவைத்துப் புதுச்சட்டிதனிற்பரப்பி, வாசிமேல்சட்டிமூடி மண்ணொனுஞ்சீலைசெய்து, பேசியேகெசபுடஞ்செய் பெருமையாம்பற்பமாகும், மாசியேலோகமெல்லாம் வகையெல்லாமாகும்பாரே.

பாருநீலோகபற்பம் படிப்படிவெவ்வேறாகச், சீருடன்செய்துக்கொண்டுதிடமுடன்செந்தூரங்கள், ஆசினிசெய்யும்போது அடைவுடன்கூட்டியாட்ட, பாருநீபத்துக்கெல்லாமிதுவெனவிதனைப்பாச்சே. ௬௪

பாச்சுவாய்குளிகைக்கெல்லாம் பரிவுடன்லோகபற்பம, ஆச்சியாமுன்றூலெல்லாமறைந்திட்டபற்பம் கூட்டச், சாட்சியாய்சொன்னதெல்லாஞ் சகலத்துக்கிதுவேகூட்டு, வாச்சுதுவயித்தியோர்க்கு வண்மையாமிந்தநூலே. ௬௫

நூலினிலாருஞ்சொல்லார் நுணுக்கமா மிந்தப்போக்கு, கால்வழிஅறியமாட்டார் காசினிவயித்தியோர்கள், பாலினில்வெண்மைபோல பாடினேன்பலநூலெல்லாம், கால்வகைநூலும்பார்த்தால் நல்லதோர்விபரமாமே. ௬௬

லோகச்செந்தூரம்.

விபரமாயஷ்டலோகம் விபரத்தை சொல்வேன் கேளு, அபரமாய்லோகபற்ப மதனிடைசெந்திக்கூட்

டி, சிபமாவீரங்கால்தான்சேர்த்துநீபழச்சாற்றாலே,
உபரமாய்சாமமாட்டிஉலர்த்தியோர்வில்லைகட்டே.

கட்டியோவியிற்காய்ந்தால்கனத்தையாமோட்டில்
வைத்து, ஆட்டியேஓடுமூடி அப்பனேசீலைசெய்து, மூ
ட்டியேகனபுடத்தில் மூட்டியேஆறக்கண்டு, சேடி
யேயெடுத்துப்பார்த்தால் சிவந்திடுமெருக்கம்பூவே.

பூவதாஞ்செந்தூரத்தைப் பணவிடை புசிக்கத்
தேனில், நாவதாம்பத்துநாளில் நன்றாகததீரும்நோய்
கேள், சாவதாமபாண்டுரோகம் சாந்நீகாமாலைபித்த
ம், பாவதாமகுன்மம்வாய்வு பறந்திடும்பகரக்கேளே.

பறந்திடும்நீர்தோஷங்கள் மகோதரம் பாரிசவா
ய்வு, இறந்திடும்ரோம்பல்தான் இன்னமும்முடக்கும்
வாய்வு, செறிந்திடுவாதபித்த சிலேஷ்பத்தாலுண்டா
ம நோய்கள், அறிந்திடுங்கெற்பவாய்வு அறுவகைகு
லைபோமே. ௭௰

காந்தச்செந்தூரம்.

சூலைபோம்செற்பமுண்டாம் சுகமுளசெந்தூர
தான், ஆலயபாகச்சொல்வோம் காந்தச்செந்தூரந்த
ன்னைச், சாலவேலோகம்போலேசார்வுசெந்தூரஞ்செ
ய்யே, வாலையாந்தேனிலேகால் மண்டல மருந்தக்
கேளே. ௭௧

அநாந்தவேமஞ்சாங்கோடுநீரிழிவுடனேமாறும்,
திருந்தலே சூயாங்களிலே சாகமுஞ் சிரசில்தோஷம்,
பொருந்தியகிராணிதோஷம் பித்தமுமபோகுஞ்சொ
ன்னேம், இருந்திடும்வாய்வுமெல்லா மேவிடுமிதனைக்
கண்டால். எ௨

காரீயபற்பம்.

கண்டதோர்காரீயத்தின் பற்பத்தைக்கருதிக்கே
ளு, ஏன்றதோர் பறபத்துக்கு இடைக்கிடை லிங்கங்கூ
ட்டி, விண்டதோர்பழச்சாற்றாலே சாமமேஅரைத்து
வில்லை, ஒண்டவே யுலாவைத்து வோட்டுமே லோடு
மூடே. எ௩

மூடியேசீலைசெய்து முழப்புடமாறினபின், நாடி
யேபொடித்துவைத்துநல்லதோர்தேனில்கொண்டால்
கூடியேகிரந்திசூலை பதினெட்டுகுஷ்டந்தீரும், ஓடியே
பிறமேகங்களொழிந்திடுமுண்மைதானே. எ௪

வங்கபற்பம்.

உண்மையாய்வங்கபற்பம்உறுதியைச்சொல்லக்
கேளு, வண்மையாமியம்போலே வைததிடுசெந்தூரக்
தான், தண்மையாயனுபானங்கள் தானறிந்துண்பா
ஞ்சில், கன்மமாய்உடலிலுள்ள வியாதிகள்காணுதெ
ண்ணே. எ௫

தாம்பிரபற்பம்.

எண்ணவேதாம்பிரத்திலிடைக்கிடைகெந்திகூட்
டி, உண்ணவேஎருக்கம்பாலிலாறவைத்[illegible]வத்து.

துண்ணவேயோட்டில்வைத்துத் துலங்கவேயோடுமூ டிமண்ணுசீலைசெய்து கெசபுடமாட்டிப்போடே.

போட்டேடுஆறின்பின்பு கல்மயில்கழுத்தாம்வ ர்ணம், காட்டிடுதேனிற்கொள்ளப் பணவிடைநயந்து பாரு, காட்டிடும்பத்துநாளில்கபெயகுன்மமெட்டும, வ ட்டிடுஞ்சகலநோயு மோட்டேடுத்தோடும்பாரே.

வெள்ளிபற்பம்.

ஓட்டிடும்வெப்புபாலை நீராம்பல்மகோதாங்கள் கூட்டிடுந்திரண்டவாய்வு சூலைத்தோடுங்கூர்மைசேரு, ஆட்டிடுவெள்ளிபற்பமதனிடைகெந்திகூட்டி, நாட்டிடு பழச்சாற்றூலேயந்தனைசாமப்நாலே. எ௬

நாளினில்வில்லைசெய்து இரவியினிலூரப்போடு ஆளினிலையைப்போலே அடையைதான்வைத்து மூடி, மாளினில்சீலைசெய்து வைத்திடுகெசபுடங்கான், பாளினில் முத்துப்போலே பவளமபோல சிவந்து போமே. எ௭

சிவந்திடுஞ்செந்தூரத்தைப் பணவிடைதின்பீரா இல், சிவந்திடும்நோய்களுக்கு அனுபானமறிந்துசெய் யில், சிவந்திடுநோய்கனெல்லாங்கடலிலேயோடிப்போ கும், சிவந்தலைத்தேகுதற்குச் சூட்சத்தைப்பகர்ந்திட் டேனே. எ௮

தங்கபற்பம்.

இட்டதோர்தங்கபற்ப மிடைக்கிடை கெந்திகூட
டி, திட்டமாய்சூதங்கூட்டி சிவந்திடப்பழச்சாறூட்டி,
வட்டமாய்வில்லைசெய்து ரவியினில்வைத்துலர்த்தி,
மட்டமாயோட்டில்வைத்துமறுபடியோடுமூடே.

மூடியேசிலைமண்செய் முக்கியங் கெசபுடத்தில்,
வாடியேமயங்கவேண்டாம் வயித்தியர்களேகேளுங்க
ள், நாடியேசெந்தூரந்தான் பணவிடைகல்குவீரேல்,
கூடியேசன்னிவாதங்குலைகுலைந்தேகுமன்றே. ௮௨

ஏகுமேசுரங்களெல்லா மிளைத்திடு மீளைகாசம்,
போகுமேமேகசூலை புண்புரைசிலந்திகுஷ்டம், ஆகு
மேகுன்மம்வாய்வு அனலெழுவாட்சிகாந்தல், வாகு
மேக்ஷயரோகங்கள் பித்தமும்வாங்குமன்றே. ௮௩

லோககுளிகை.

வாங்கிடுஞ்செந்தூரத்தின் வரிசைக ளெல்லாஞ்
சொன்னேன், பாங்குடன்குளிகைசெய்யும் வரிசை
தான்பகரக்கேளு, ஓங்கியதங்கம்வங்க முறிபாமீயம்
வெள்ளி, தீங்கிலாதாம்பிரம்லோகம் செய்திடுசெந்தூ
ரந்தான். ௮௪

தாளிதுவளைக்கழஞ்சிசென்றாஞ்சரியாய்தூக்கு
மாளரிதாரங்கெந்திமனோசிலைவீரஞ்சூதம், ஆனதோ
ர்லிங்கங்காரம அதுவளைகழஞ்சியொன்று, நாளிதுக
ல்வத்திட்டுப் பழச்சாற்றில்சாமமொன்றே. ௮௫

ஒண்ணொளஆட்டிமத்திக் கயறுபோலுருட்டிநீள
ம், பண்ணதுபூசைசெய்து பரிவுடன்நிழலில்காய்ந்தா
ல, அண்ணதுசெப்பிலவைத்து ஆட்டெல்லா மாடக்
கேளு,நண்ணதநாட்டிலுள்ள நாடகமாட்டுவோமே.

ஆட்டுவதென்னவென்று லடைவுடனிஞ்சிச்சாற்
றில், கூட்டியே முலைப்பாலோடு கொடுத்திடச் சன்னி
யேது, நாட்டினில்சுரங்களோதுநவின்றிடும்வாதமேது
வாட்டிடுசிலேஷ்பமேது மயங்கியபித்தமேதே.

ஏதென்றாலைகாச மிளைப்புடன்க்ஷயங்கள்மேக
ப், வாதென்றுவந்தகுன்மம் வாய்வுடன்வரட்சிகாந்த
ல்,மாதாக்கள்செற்பரோகமசனமாம்வாந்திவிக்கல்,ஊ
துகாமாலைபாண்டு வுள்மூலமுளையுமெண்ணே. ௮௮

உளவுசெப்கிறேனிகுலை உறுதிநீரிழிவுகுஷ்டம்,
களவுசெய்கண்ணோயோடு கடிவிஷ நோய்கள்பின்னு
ம், அளவிலாநோய்களெல்லா மகன்றிடுமிதனைக்கண்
டால், தளவிதைஅறிந்துசெய்தால் தரணியில்நோய்
நில்லாதே. ௮௯

நிலலாத நேய்களென்ற நிச்சயமெதிறாலென்று
ல், வலலாதஅஷ்டலோகம மாரணமபண்ணுதாலே,
செல்லாத மாரணத்தைச் சென்றாச் செய்கையாலே,
சொல்லாதசூட்சநதன்னைச் சொல்லியவறுதியாலே.

சொல்லிய சூட்சங்கன்னைச சேர்த்தனையாகக்கண்
டால், சொல்லியகன்மமெல்லாந்துலைத்திடுஞ்சூட்சஞ்
சூடசம, சொல்லிய சூட்சமெல்லாஞ் சோதியதாகச்
சொனனேன், சொல்லியநூலுக்கெல்லாஞ் சுருதியா
மிநதநூலே. ௬௧

நூலெல்லாங்கண்டுதேர்ந்தால்நூலுக்கங்கள்பல
வுந்தோணும, சாலவேசாக்குசுத்தி சாற்றியகன்மசூத்
திரம்,வலவேஅஷ்டலோக மாரணமியமபிஞேம்நாம்,
பாலதுபோலாமிந்நூல் பலவதுமுந்நூலன்றே.

முந்நூறுமுப்பத்தாறுமுதுமொழிகன்மசூத்திர
ம், முந்நூறும்நூற்றன்பதுமுறையுடன்முடிவதாகும்
முன்னூல்தாஞயிரத்திருநூறுமறுநூறுகும்,முன்னூ
ல்தாஞயிரத்தை அதிகமாய்மொழிந்தவாறே. ௬௨

வாறுகேள்முன்னூலாய்நதுவட்மொழிதமிழாற்
செய்தேன், வாறுகேள்வாதம்யோகம்ஞானமும்வகை
யாய்தொன்னேன், வாறுகேள்ஆயிரத்தில்வயித்தியம

திகஞ்சொன்னேன், வாதுகேளன்றாலெல்லாம் வகைஞ
யுடனுய்க்குபாரே. கச

பாய்ந்துநீ முன்னூலெல்லா மறிந்துநீ பார்த்தா
யானால், தோய்ந்திடும்வாதம்ஞானம்வயித்தியம்லோ
கபற்பம், ஆய்ந்திடுலோகத்தோர்க்குப் பிணியில்லைம
ரணமில்லை, ஆய்ந்திட்டப்பாலேநீதான் பாவத்தினிவி
ர்த்திபாரே. கரு

பாவத்தை நிவிர்த்திசெய்து வயித்தியம்பரிந்து
செய்நீ, சாபத்துநிவிர்த்திதன்னைச் சாற்றினேமூன்
றுள்ளே, ஆபத்துக்குதவிசெய்யு மறிவுள்ளவயித்தி
யோரே, சிவதினுதுறுதியாகச் சிவபூசைதிருந்தச்
செய்யே. கசா

செய்வதுவயித்தியந்தான் வடுகனைச்சிறந்துபூசி,
சைவருமஷ்டகன்மம் சிதம்பரங்கருதிப்பாரு,உய்வது
வெல்லாஞ்சுத்தி நாடியினுறுதியாலே, கையபின்னுட
லில்வந்த களவதும்நாடியாலே. கஎ

நாடிதானறியவேணும்நயத்தினைக்காணவேணும்
வாடியேமயங்கவேண்டா மருந்தினுகமத்தைக்கேளு,
கூடியசிதம்பரத்தைக்குணமுடனெழுதிக்கட்டி, நீடிய
வஷ்டகன்மஞ் செய்திடநிவிர்த்திகேளே. கஅ

கடுக்காய்லேகியம்.

கேளுநீ கடுக்காய்நூறு பலமதுவொழுக்குக்கு,
வாளுரியிடித்துத்தோண்டி வைத்திடு நாழிக்குள்ளே,

தாளுநீ தூணிவெள்ளஞ் சலமதுசரியாய்விட்டு-ஆறு
நீயெட்டொன்றாக அதுதனைவடித்துவாங்கே. ௬௯

வாங்கியகியாழத்துக்கு மருந்துநீமருவிக்கேளு,
ஓங்கியசிவதையிஞ்சி உத்தமமிளகுவோமம், பாங்கு
ள்ளகடுக்காய்திப்பிலி() பஞ்சதாரையுமாக, ஆங்கிதை
அரைத்துப்போட்டு ஆவின்நெய்படிதாளுமே. ௭

ஆமிதுகியாழத்துக்குப் பலமது அரைத்துப்போ
டு, வாமிதுபாகுபோல வற்றியபோதுநெய்யை,ஓமிது
விட்டுக்கிண்டி உறுதியாய்லேகியத்தைத், தாமிதுபத
னம்பண்ணிப புன்னைக்காயளவுதானே. ௭௧

அளவதாயுருட்டிக்கொள்ள அக்கினிமந்தஞ்சூலை
குளவதாமலசலங்கள் கூடியவாய்வுபத்து; களவதாமூ
லமாறும் கடியதாய்தீருமென்று, பழுதிலாமுனிவன்
சொன்ன அரிதகிபரிந்துபாரே. ௭௨

வேறு, நெல்லிக்காய்லேகியம்.

பாருநீநெல்லிக்காய் கியாழந்தன்னில் பரிவாகப்
போடுதற்குவிபாங்கேளு, தாருநீபலம்நூறு நெல்லிக்
காய்க்குத் தானதூணிநீர்விட்டு வற்றக்காச்சி, வாருநீ
யெட்டொன்றாய்வடித்துக்கொண்டு வகையாகச்சட்டி
யிலேவைத்துக்கேளு, சிருடனேமருந்துவகை செப்பு
வேன்கேள் திப்பிலியுநல்லசுக்குமிளகுமாமே. ௭௩

() பஞ்சதாரை என்பது - சர்க்கரை.

வேறு.

சுக்குடனேமமூலம் கிரும்புகைச் சோளம்ஏலம்,
குக்கிலும்வாய்விளங்கம் சிரகங்கொத்தமல்லி, உக்கு
வாய்விளங்கமொன்று கூரைநீர்மதாமூந்தான், சர்க்க
ரைபலமூம்பத்து தானதுகரைத்துக்கொள்ளே. ௱சு

கரைத்திடுமருந்தையெல்லாம் கியாழத்தில்கரை
த்துக்காச்சி, உரைத்திடும்பாகுசேரில் ஒருபடிநெய்
யைவிட்டு, நிரைத்திடுகிண்டிக்கிண்டி நேர்மெழுகது
போல்வாங்கி, பரைத்திடும்பதனம்பண்ணி பாக்கள
வாய்நீகொள்ளே. ௱௫

பாக்கதுவாகக்கொள்ள பகாரமைமண்டலங்கேள்,
ஊக்குள்ளமேகமஸ்தி சுரமுடனழலைகாந்தி, போக்கு
ள்ளசிராணிவாய்வு பொருமலுமிருமலோடு, சிக்குள்ள
சூலயமூமீளை சிலேற்பனமாண்டுபோமே. ௱௬

தாணிக்காய்லேகியம்.

போயது தாணிக்காயின் லேகியம்புகலக்கேளு,
ஆமதுபலந்தான்நூறு அவித்ததைத்தூணிநீரில், வம
துவெட்டொன்றுக்கி விடையமுஞ்சாதிக்காயும், தாம
துஅபினிகஞ்சா தான்பலமொன்றதாமே. ௱௭

ஒன்றெனுமருந்தையெல்லாமுறவாகத்தூளுசெ
ய்து நன்றதாஞ்சீனிபத்து பலமதுநவிலக்கேளு,கண்

ட்ணகியாழந்தன்னில்கரைந்துபபாகதிலேசேரில், வென்றதுசூரணத்தை பாச்சிநெய்யூந்திடுகின்டே. ௱அ

கிண்டியேமெழுகுபோல பதத்தினிலிறக்கிவைத்து, மண்டலங்கொள்வீராகில் வயிற்றினில்பொருமல்வாய்வு, அண்டியகடுப்புசெத்தமண்டிசுரங்கிரணிமூலம், பண்டுள்ளவாயுவோடு வுஷ்டிணும்பறந்துபோமே.

சுக்குலேகியம்.

பறந்திடுமென்று சொன்னோம் பகர்சுக்குலேகியங்கேள், சிறந்திடுமிந்தலேகியம் குணத்தை யென்ன சொல்வேன், உரைத்திடுஞ்சுக்குநாறுபலமதுஉகந்துவாங்கி, அரைத்திடு சலந்தான்தூணி பதிவிட்டெட்டொன்றாக்கே. ௱௰

ஆக்கியேபனையின்வெல்ல மதனிடைபலந்தான்பத்து, தாக்கியேகரைத்துக்கொண்டுதானதுபாகுசேரில், நோக்கியேயிதனுக்குள்ளே நுகர்ந்ததைச்சொல்லக்கேளு, தூக்கியேபடிதானேமம் கருதின்வேம்பிலேயின்தூளே. ௱௰௧

தூள்வகைகரெண்டுங்கூட்டி தூவியேகிண்டிக்கிண்டி, ஆளதுஆவினெய்தான் அரைப்படிகூடவிட்டு, கூளதுபோலேவாங்கிக்கொள்வதுபுன்னைக்காயம், நாளதுநாற்பதுக்குள் நவிலுறேன்தீரும்நோய்கேள். ௱௰௨

நீரும்நோய்கிருணிமூலம் தெசவாய்வுஅதிசாரங்
கள், வாருகேடுப்புமொததம பாரிசவாய்வுநீரும, சேரு
நீ பொருமல்மந்தஞ் செரியாமையுள்ளேப்பங்கள், ஆ
ருமே அறியச்சொன்னேம் அகன்றிடும் அறிந்து
கொள்ளே. ௱௰௩

பிளகுலேகியம்.

அறிந்துகொள்பிளகுலேகியம் அதில்நாறுபலந்
தான்வாங்கி, செறிந்துகொள்தூணிநீரில் சிக்கெனவெ
ட்டொன்ருக்கி, பறிந்திடுகற்கண்டப்பா பலமதுபக்
குப்போட்டு, முறிந்திடக்கிண்டிக்காச்சிப்பாகுபோல
வாங்குமுன்னே. ௱௰௪

முன்னதுஅரத்தைஅக்கிரு சிரகமுதுகிரும்பு, வ
ன்னதுவேலக்கோஷ்டமகிகமாமதுரங்தேற்ருன்,பன்
னதுவாய்விளங்கம் பத்திரிகருக்குமூலம், சொன்னது
வகையொன்றுக்குப் பலமதாய்துாக்கிடாயே. ௱௰௫

துாக்கியேபொடித்துக்கொண்டு பாகினில்தூவிக்
கிண்டு, ஆக்கியேநெய்யொழி யதிற்பாதிதேனுமாகு
ம், பாக்கியேமெழுகுவென்னும் பதத்தினில்தனைவா
ங்கி, நோக்கியே வைத்துக்கொண்டு நனுக்கத்தைச்
சொல்லக்கேளே. ௱௰௬

சொல்லக்கேள்தீநம்நோய்தான் இலேஷ்பனந் தொண்ணூற்றாறும், வெல்லக்கேள் பொருமல்வாய்வு அக்கினிமந்தத்தோடு, நல்லக்கேளசூடுகாந்தல் நலமு டன்சுரமுமஸ்தி, வல்லக்கேள்கபங்களீனவாய்வதுவா ங்குந்தானே. ௱௰௪

வாங்குதிப்பிலிதான்நூறு பலமதுதூணிநீரில், வாங்கியேவெட்டொன்றாக்கி மருந்தினையுரைக்கக்கே ளு, பாங்குசற்கண்டுபத்துப்பலமதுபாகுசெய்து, ஆ ங்குசுகமொடுகடுக்கா யரத்தைஅக்கிறுகாசமோமம்.

சீரகலேகியம்.

ஓமமுஞ்சீரகந்தான் உற்றதோர் கொத்தமல்லி, சாமமேவெட்பாலோடு செண்பகப்பூவுங்கோஷ்டம், நாமமேவகையொன்றுகசுநலமுடன்பலந்தான்வாங்கி பாமமேயிடித்துத்தூளாம் பாகினில்கண்டுவாரே.

வார்த்திடுநெய்யுந்தேனும்வகைவகைஉரியுழக்கு சார்த்திடுமெழுகுபோலேதானதுவாங்கிவைத்து, காா த்திந்தாணிக்காயின் அளவாகக்கருதியுண்ண, மாய்த் திடும்பிணிகளெல்லா மண்டலந்தன்னிற்கேளே.

தன்னிய இலேஷ்பனந்தான் தட்டழிந்தோடிப் போகும், புன்னியவாதம்போகு மதிசாரிருமல்போ

கும், உன்னியவாய்வுதிரு மூப்பிசமாந்தந்திரும், பன்னியயீளைகாசம் பயப்படுமெபாருபாரே. ௱௨௧

பாருமுக்கடுகுஞ் சொன்னேன் பகாதிரிபலையுஞ் சொன்னேன், ஆருவெள்ளுள்ளிப்போகஙக அறையுறேன்இங்காயத்தை, சீருடன்பலமநூறப்பா செலமதுதுணிககாய்ந்து, ஆகுமேயெட்டொன்றாக்கி வடித்திடுமருநதுகேளே. ௱௨௨

மருந்துஇங்காயஞ்சுக்கு வால்மிளகுஇந்துப்பு,திருநதியவலமதமக் திப்பிலிமிளகுசீராம், விருந்தியதிரிபலைவெட்பாலை விடையமும்பலமதாக, பொருந்திய வாய்விளங்கம வோட்டிடுஞ்சினிபோடே. ௱௨௩

போட்டிடுசினிதானும புகழுடன் பாகுசெய்து, மாட்டிடுசூரணதனை வாத்திடுபசுவின்நெய்பால், நாட்டியேபடிகாலாகும நவின்றிடுமருந்தொன்றுக, காட்டிடுமெழுகுபோல கட்டிடுபுன்னைககாயே. ௱௨௪

காயதுவாகவுண்டால் கழன்றிடும் வியாதியெல்லாம், நோயெதுவாய்வுவாதம் கொடிபினிற் பறந்துபோகும், ஆயதுகுன்மமென்று மகன்றிடு மின்னஞ்சொலவேன், நீயதுகண்டுகொள்ளு நிச்சயஞ்செசால்லக்கேளே. ௱௨௫

கடுகுலேகியம்.

சொல்லியகடுகுநூறு பலமது தூக்கிகொண்டு, நல்லது தூணிநீரில் நவிலுவன் எட்டொன்றாக்கி, தள்ளியகருப்புக்கட்டித் தான்பலம்பத்து சேர்த்து, அல்லியபாகுசெய்து அதிலிடுமருந்துகேளே. ௱உசு

கேட்பதுஓமஞ்சுக்கு திப்பிலிசீரம்புபாயம், நாள்பதுகொத்தமல்லிசிரகம்நவிலக்கேளு, தாள்பதுவாய்விளங்க மஞ்சளும்விடையந்தானும், வெள்படவகையொன்றுக்குப பலமொன்றுவறுத்துகூட்டே.

கூட்டியே பொடித்துத்தூளாய் குலவியபாகில் சேர்த்து, காட்டியநல்லெண்ணெய்தான் கால்படிக்கலந்துகிண்டி, நாட்டியேமெழுகுபோல நயம்படவழித்துவைத்து, திட்டியபுன்னைக்காயளவா யருந்திடச்சிட்டைசைகேளே. ௱உஅ

சிட்டையாமூலரோகம் வாய்வுடன்திரட்சிதானும், சிட்டையாம்புளித்தேப்பங்கள் செரியாமைபெருமல்தானும், பட்சியாக்குன்மம்வாய்வு பதறுமல்சலங்கள்ரெத்தம், வெட்சியாம்புழுக்கள்தீரும் வெந்தியம்பரிந்துகொள்ளே. ௱உகூ

வெந்தியலேகியம்.

பரிந்தவெந்தியந்தானப்பா பலமது நூறுவாங்கி, அரிந்திடுசெலந்தான்தூணி யதில்விடுஎட்டொன்றாக்

கி, செரிக்கிடும்பஞ்சதாரை சிறக்கிடப்பலந்தான்பத் து, திறந்திடக்கரைத்துப்பாகாய் சேர்த்துமேல்மருந் துகாணே. ௱௬௰

காணநியதூரங்கோஷ்டம் கசகசாசிரகந்தான், பூ ணதிவிடயமோமம் சாதிக்காய்கிருய புவோடு, தாண வேகஞ்சாசாக்குருரேசானிபலமாய்தூக்கி, ஊணவெ பொடித்துக்கொண்டு வுறவிடுபாங்கில்தானே.

பாங்கனிக்கறுநெய்காழி பாலதும்விட்டுக்கிண்டி வாங்குநீமெழுகுபோலே வழித்துநீவைத்துக்கொண் டு, அகினிக்கடுபபுக்கெல்லா மூட்டிடுகமஞ்சிவிதம், அக்னிகோளரியென்றவகையெல்லாமகன்றுபோமே

ஓமலேகியம்.

அகன்றிடும்ஓமலேகியம் அறையுநேதன்பலம்நூறப்பா புகன்றிடுஞ் சலந்தான்தூணி புகட்டியேயெட்டொன் ருக்கி, பகன்றிடுஞ்சர்க்கரையும் பலம்பத்து வாங்கிவ ந்து, நிகன்றிடுபாகுஞ்செய்துநிச்சயமருந்துகேளே.

சொல்லக்கேள் அமுக்கிருவேர் குக்கிலுஞ்சினப் பாவும், நல்லக்கேள்கார்கோலோடு நாட்டிடவகைபல ந்தான், அல்லகேள்குாணத்தை அப்பனேஅதனில் பாச்சு, வெல்லக்கேள்நறுநெய்காழி விட்டதில்கிண்டி வாங்கே. ௱௬௪

யேகழுஞ்சுவீத மண்டலங்கொள்விராகில்
பறங்கிகுலை உலர்த்திடுஞ்சிரங்குகுஷ்டம், தா
ளரந்திபுண்கள் சார்ந்திடுஞ்சில்விஷங்கள், ஈங்கிவை
னவாய்வு வாதமுமேகுமன்றே. ௧௫

ஏருமேகாயந்தன்னை யியம்புறேமின்னங்கேளு,
பாகுசேர்சோமனாதி பலமது இருபதஞ்சு, வாகுமே
தாணிநீரில் வாட்டியேயெட்டொன்றாக்கி, ஆகுமேசி
னிபத்துப் பலமதுவிதனிற்பாச்சே. ௧௬

பெருங்காயலேகியம்.

பாச்சியேபாகுசெய்துபரிந்திடுமருந்துகேளு, ஆ
ச்சியேவெள்வெங்காயங் கடுகுடன்மிளகுஞ்சுக்கு, வ
சியேதிப்பிலியோமம் சீரகமதாங்கோஷ்டம், ஆச்சி
யேபலமொன்றாக ஆவினெய்படிகால்வாரே. ௧௭

காலதுவார்த்துக்கிண்டிசாய்ந்துமேமெழுக்தானா
ல், சாலவேவழித்துவைத்துத்தான்றினங்கழஞ்சிவீத
ம், ஏலவேகொள்விரானா லியம்புறேர்தீரும்நோயை,
ஓலமாய்வாய்வுவாதமோடிடுமுண்மைதானே. ௧௮

உண்மையாருமருந்துகொண்டால் பத்தியமுறைக்
கக்கேளு, கண்டிகன்மிளகுமஞ்சள்சீரகங்கருகிக்கொள்

ளு,தண்மையாங்கறிவகைகள் சாற்றுரோந்தாணியோர்க்கு, வண்மையாமுருங்கைப்பிஞ்சும் வழுதலைப்பிஞ்சுமாமே. ௧௩௯

பிஞ்சொடுவாழைக்காயும் பிசகிலாசிறுக்கீரையும் அஞ்சியேபொன்னாங்காணிஅவரைபின்பிஞ்சுமத்திது ஞ்சிடுந்தூதளங்காய்துவரைநெல்லிக்காயோடு, கொஞ்சியமுசுட்டைக்கீரைகொண்டிடகுணமதாமே.

குணமதாம் பால்நெய்மோரு குறுமயிலுடுமபுகாடை, பணமதாய்வெள்ளாட்டுவற்றல் பகர்ந்திடுகவுதாரியும், கணமதாமுடும்புமுள்ளான்கடல்மீனில்சுதும்புகிழங்கான்,நிணமதாம்ஆமைவிராலும்நீந்திடுமுளுவைதானே. ௧௪௧

உளுவையுஞ்சுளுதிருக்கைநெத்திலிஉறுதியாதும், பழுதிலாவிதுகளெல்லாமபகர்ந்திட்டோம்பொதுவாய்ததானே, எழுதியநோய்கள்கண்டுஎடுத்துக்கொள்இன்னதென்று, கொழுகியபத்தியந்தைக் கூறினேனுங்கூட்டிக்கொள்ளே. ௧௪௨

லோககுளிகை.

தொள்வதுலோகபற்பம் கூறியவகை வகைக்கு, அள்வதுஇடைக்குக்கீகந்தியதிலிடுகழஞ்சிவீதம்,தள்வதுகுமரிச்சாற்றால் தானரைத்தண்டைசெய்து, நள்வதுசெப்புக்கின்னமதிலிட்டுரவியில்வையே.

இரவிதனில்வைத்தபின்பு நாழிகைபதினென்று
றால், கவியவேதிப்பிடித்துக்கனலதுபுகையுங்காணும்
அவியவேகண்டெடுத்து அப்புரம் கெற்குள்வைத்து,
புவியிலேபத்துநாள்சென் றெடுத்துநீபுதுமைகேளே.

புதுமைகேளதுதப்பாமல்போட்டுவைவெவ்வே
றாக, எதுமையாநோய்கட்கெல்லா மின்னங்கண்டுகரு
திப்பார்த்து, அதுமையாமனுபானங்க ளதுக்கும்வெ
வ்வேறதாகப், புதுமையாம்பற்பங்கள்தான் பாச்சிடு
வியாதிகண்டே. ௧௪௫

கண்டுகொள்ளஷ்டகன்மம் மாரணங்கடந்தமந்தி
ரம், கண்டுகொள்கன்மருஸ்திரம்பகர்ந்திடுமிதுவுமொ
ப்பு, என்றுசொல்மனுஷர்பேரி லெதிர்த்திடும்வியாதி
யெல்லாம், முண்டுதமூன்றுபேர்க்குமுறைந்திடுமதே
கநதானே. ௧௪௬

தேகந்தான்வலுத்துப்போச்சு தேசத்தின்வியாதிக்
திபோரே, ஆகமேவருத்துதென்று தன்மத்தைப்பின்
றிடாதே, பாகமேஅறிந்துசெய்தால் பலித்திடுங்கரு
வும்வேண்டாம், நாகமேயணிந்தமூர்த்தி நவின்றதை
நயசொன்னோமே. ௧௪௭

மேலதாம்லோகபற்ப மிருந்ததோர் சொர்ணபற்
ப்ப், சாலவேரெண்டுமொன்றாய்ச்சமனிடையாகத்தூ
க்கி, பாலதாம்விரம்லிங்கம் பாச்சிடைக்கிடையதாக,
வாலிப்பாப் உமிழநீராலேமத்தித்துவில்லைகட்டே.

கட்டியவில்லைதன்னைக் காய்ந்தபின்ஒட்டில்வைத்
து,வட்டமாயோடுமூடிவகையுடன்சீலைசெய்து,திட்ட
மாய்குக்கிடத்தில் சிவந்துநீறிப்போகும், எட்டமாம்
வெள்ளிசெம்பில்எழுமையிதுசொன்றேமே. ௧௪௯

சொன்னது தொகைதானூற்று அன்பதுசூட்ச
மாகும், முன்னமேசொன்னநூலில்முக்கியமிந்நூல்சூ
ட்சம், வன்னமேலாறுலோகமாரணமதிசூட்சம், மு
ன்னமேசொன்னநூற்றிலைய்பதுசூத்திரமுற்றே.

கன்மசூத்திரம்

முற்றிற்று.





கடவுள் துணை.

சூ த மு னி நா டி - ௩௦.

—————)-(—————

வாதமது முன்னெழுந்து தாழ்ந்து சற்றே மயிலது
போல்நடை நடந்து மங்குமாகில், சேதமது இல்லையெ
ன்பது தாரு மாண்டிற் செப்பலாமாணமென்று நீக்க
மாக, நாதமது குறைந்துவிட்டில் போலே கண்டால் நா
ளெட்டில் மரணமென்று நவிலலாகும், பேதமது இல்லை
யிது பிசகிடாமல் பெரியவனுஞ் சூதமுனி பேசுங்காலே.

காலான பித்தமது துடியே கண்டு கனலெழுந்து வ
ந்திடுகில் சிதமாச்சு, மாலாகி லும்பார்க்கமருந்துமில்லை
மரணமது மூன்று திங்கள் வசிசையாகும், நகலான பித்த
மது தொங்கத் தொங்கிநடை நடந்து பாம்பது போல் நட
க்குமாகில், மேலான பதிமூன்றாந் திங்கள் தன்னில் விற்
றிருந்த கூடழியும் விரும்பிப்பாரே, ௨

பார்ப்பாவயித்தியனே மாணநாடி பாங்குடனே
சொல்லுகிறேன் பாரின்மீது, சோப்பாசிதமது சிலேத்
துமமாகும் சிலதியேயாமை போல் நடந்தானால், க.
டப்பாசாவுபதினொன்றுமாண்டில் குறையில்லை கண்ட

துபோல்நடக்துதானல், மாரப்பாநாள்வந்துதென்று
சொல்லி மருந்துகளையருந்தாமலிருந்திடவே, ௩

இருந்திடவேயின்னமொருகுறிதான்சேரு இய
ல்பானவாதமதுகீழேநோக்கி, ஒருந்திடவேமேலேகி
நடக்குமாகில்லப்பனேயன்பதுநாளாகுமென்ன, மரிந்
திடவேபித்தமதுதொங்கிசசற்றேமணிநாக்குஅசைவ
துபோலசையுமாகில்,சூரதிடவேவிக்கமதுகழிச்சலா
கிச சோர்வுடனேவைகுநதஞ்சகமதாமே, ௪

ஆப்டாகண்சிவந்துசுழித்துவாங்கி யறிவுகெட்டு
பதிமயங்கியோசைகுன்றிற,போமடாஆறுநாள்சிவன்
போகும போதமதுநின்றுசற்றே பேசுயாகில், நாம
டாபிததமதுவிழவில்லைநயபரிதுவமபுவருமநாடாதே
கேள், சாமடாமூன்றுநாள்சிவன்போகும் சககாமும
றுதியென்றேசாற்றலாமே, ௫

சாற்றுகிறேன்வாதபித்த சிலேத்தும மென்றுஞ்
சாரவானதசநாடிபத்துண்டென்றும், ஏற்றுகிறேனோர்
விரலுக்கிரண்டுநாடியியலானஐவிரற்குப் பத்துநாடி,
மாற்றுகிறேனங்குஷ்டவிரலுக்குத்தான் வகுத்தறிவி
ர்பிராணனொடுஅபானன்றுனும், போற்றுகிறேன்தற்
[illegible]க்குத்தான் புகழ்பெரியவுதானனொடு
[illegible]னொடே, ௬

ஆதிமத்திமையாம்விரலிறாதனை அடுத்துநி
ன்றுநாமமேனோக்காதானுல், போதுமே அனுமியெ
னும்விரலிற்றானும் புரம்பெரியசமானனெடுகிரிகான்
றன், ஏதுமேகனிஷ்டகவிரலில்தானே யியல்பானதே
வியனெதனஞ்செயன்றான், தாதுமேயிப்படியேவிரலி
ல்தானுந் தானிருக்குந் தனஞ்செயன்றான் சமான
னுமே, ௭

தனஞ்செயனுந்தசவாய்வுபத்தர்க்குஞ் சாற்றுகி
றேன் தசநாடிமுன்போலேதான், தனஞ்செயனுமிடை
யிடெனுடேபிங்கலையுமாகுஞ் சாட்டிநின்றசுழிமுனைசிங்
குவையுமாகுந், தனஞ்சயனும்புருடனங்காந்தாரனெ
டுதனிதனுநின்றஅசுவினிஅலம்புருடனுடு, தனஞ்செ
யனுஞ்சங்குனியுங்குகுதனெடுவகுத்துநின்றதசநாடி
பதததாமே, ௮

பத்தாகும்வாதபித்தசிலேத்துமமூன்றும் பக்கு
வங்கள்தப்பியேபதறுமாகில், வத்தாதசீதமதுவந்து
தோன்றில் வறட்சியுடன்விக்கலது குளிர்ச்சிமேவும்,
எத்தாத இளைப்புடனேபேசசுமில்லை யிசமானவாதம
துவிழுந்ததென்றால், அத்தமவர்க்கிருபத்தோர் நாளி
ல்சாவா மாதியந்தம்பித்தமதைப்பிறிந்துபாரே, ௯

பிறிந்துபார்பித்தமது அசைவுநின்றால் பேசரிது
மரணமதுகிமிஷமாகும், தெரிந்துபார்சிலேத்துமமது
வசைவுநின்றால் தேகம்விட்டேகிவிடு மிருபதாறாள்,

குறிந்துபார்பித்தமொடு வாதக்கூடில் குறிசொல்வே
னெழிரண்டிற் குறைந்துபோமே, ௰

குறைந்துபோம் வாதமொடு சிதக்கூடிற் கூட்டி
லேமாற்றிவிடுஞ் சயத்தைதானும், னிறைந்துபோங்
கபவேளையிலைப்புமாகும் நெஞ்சடைக்குங்காதடைக்
கும்நிலைமையில்லை, மறைந்துபோம்பித்தமதில் வாத
குசேரில் வலிருன்மய்வாந்தியுமாம அன்னகதள்ளும்,
உறைந்துபோமின்னமொரு குறியைசசொல்வேன் உ
யிர்நில்க்குவிரதநிலை உரைக்கிறேனே, ௰௧

உரைக்கிறேன்சிதத்தில் வாதங்கூடி லுதிரவலி
கொண்டுமிசவுடம்புவீங்கும், நிரைக்கிறேன்பித்தமது
வசைவுகண்டால் நெஞ்சுவலிபிறவலிப்புநெஞ்சுகரு
து, மரைக்கிறேசீரோழில்மரணமாவார மண்டைதனி
லெரியெழும்பிவழியைப்பார்க்கும, அறைக்கிறதோர
மருந்துதனைச்செல்லவொட்டா தாக்கரிதுகொள்ளும
டாவதின்பேர்கேளே, ௰௨

கேளப்பாமூன்றுமிகவசைவுநின்று கெடியானர
விமூன்றில்துடிபபுக்காண்கில், நாளப்பாகுணதைிற்
கும்கொள்ளும் நவடானமூத்திர மூஞ் சிறுத்துப்போ
கும், தாளப்பாபிராணவலியெரியுருததுச் சரீரத்தில
வெயர்வெழும்பிவாயுமாகுஞ், குலப்பாமூலமூலெ
ளிபிற்றாலும் சூரங்காலுமசதியொடுசோபங்காலும்

சோபமாயேப்பமதுகலந்துகாணும் சோத்திபங் களிலலையதுதுணிக்கமெய்தும், தாபமொடுவிக்கல்வந் தால்நீறைக்கட்டிச் சஞ்சலத்தையுண்டாக்கு மலமுங்க ட்டும், வாதமுடன்சீதமது கூடும்போது வந்துவிடுமி ழுப்புடனேயிருபதாறுர், பூதமது கூடுவிட்டு எகிறிப் பாயும் பொய்யல்லசூதமுனிபுகழ்ந்திட்டேனே, ௰௬

புகழ்ந்திட்டேன் சன்னியெல்லா மூன்றுக்குள் ளே புட்டினேன்சிலேற்பனத்தைப்புகழ்ந்துகேளு,இ கழ்ந்திட்டேன்வாதபித்தம்பார்க்கவேண்டா மினிதா னசடலமெல்லாங்குளிர்ச்சியாகு, மகிழ்ந்திட்டேன்சி லேற்பனத்தைப்பிறித்துப்பார்க்கில் மதித்தெழுந்து தாயதுபோல்பொங்கிக்கண்டால், தகழ்ந்திட்டவிசை போச்சுஆவிபோச்சு தப்பாதுஎழுப்துநாள்தான்சொ ன்ஞேமே. ௰௭

சொன்னதினுல் நாடியெல்லாங்காணுர்காணுர் சூ ட்சமாய்நிலையறிந்துசொலலவேணும், இன்னதினுலா காது யென்றேயெண்ணி இருமார்ந்துதிரிந்தார்கள் கா ணுர்காணுர், முன்னதினுல்வாதநிலை பார்க்கவேணும் முறைப்படியேதொகநிலையறியவேணும், பின்னதி னுல்வேறென்றுய்பார்க்கவேண்டாம் பிரிந்துவருநாடி யெல்லாம் பேசக்கேளே, ௰௮

கேளப்பாமூலத்திலெழுந்தவாய்வு இருவிதமாய் ச்சொல்லுதேன்குணத்தைக்கேளு, காணப்பாதினங்

தோஷம்வாய்வுமிறில் நலமுடனேயமலமிருந்து மசனஞ்
செல்லாச், சூளப்பாகுடல்பொருமிவலியாய்க்காணும்
தொத்துமிகவாதபித்தங்கடினமாகுந், தேளப்பாதே
கமெல்லாம்புண்போலேகுமசிக்கெனவே வலங்கழி
யுஞ்சிணைப்பாரோ, ௰௭

பாரப்பாமூலமதிலெழுந்தவாயு பாங்குடனேதி
ருவதுபதினோநாளிற்,சிரப்பாதவமலமருந்துசெய்
தால் நிருமதுவாதபித்தமிதிலெவாங்கும் ஆரப்பாஇ
தையறிந்துசெய்யாவிட்டால் அண்டததில்குடேறும்
வாய்வுமீறுந்; தாரப்பாகிருணியைப்போற் குணமேக
ண்டு தவறுவருமன்பத்தோர் நாளில்தானே, ௰௮

தானென்றகூஷயமிருமல்நாடிகாணச் சாற்றுகிறே
ன் பித்தமதில்சிதங்கூடிற், சோனென்றசிலேசுதனில் நீ
ரேகொள்ளும் குத்துடனேயிருமல்வருங் கோழைகா
ணுந், தேனென்றஇளைப்புவரும்ரெத்தங்காணுந் தீரா
துமாதமாறுசெப்பலாகு, மூனென்றவுடம்புதனில் தி
ராரோக மூரைக்கிறேனின்னதென் றுமுந்திமுந்தி,

முந்தியதோர்பாதமுடன்புறங்கால்வீச முகத்தி
லேவீக்கமதுகண்டுதாறை, பிந்தியதோர்கழிச்சலுட
ன்கிறாணியாகும் பேசரிதுதீராதசாத்தியமாகுஞ் சிந்
தியதோர்வாந்தியுடன்விக்கல்கண்டால் தீராதுதீராது
திண்ணமாகும், அந்தியதோர்கூஷயமிருமல் சலகிருணீ
ஆறுமாந்தீராது அசாத்தியந்தானே, ௨௰

அசாத்தியந்தான் சொல்லுகிறேன் ராஜாங்கத்தி
லறிந்திடவேயின்னமொன்றுரைடைவாய்சகேளு, அசா
த்தியந்தானீர்க்கோர்வையசதிருன்மமானதொருவலி
குன்மம்போணிப்புத்து, அசாத்தியநதான் குறைநோ
வுநாக்கில்புத்து அண்டதில்பவுத்திரமுந்தொண்டை
தனூறும், அசாத்தியந்தான்முசலகிருககுஉள்வீச்சோ
டுஆறுலுந்தீராதுஅரிதுதானே, ௨௧

தானென்றுசலக்கழிச்சல்மதமதப்புத் தலைதனி
லேயுதிதெழுந்தபிளவைத்தானுங், காணென்றருந
திரவலிகாசிகண்டமாலை கன்னத்திறபுத்துடனே கும
ரகண்டன், தேனென்றமகாவாதஞ்சன்னிவாதஞ் சே
த்துமசயமுளமாந்தைசுரமாந்தைகவிசை, ஊனென்று
உயிரழிக்குமளவுபோகா துள்ளபடிசொன்னோம்
வாதநிலைப்பாரே, ௨௨

வாதமதுகீழ்நோக்காதிருந்து மயக்கத்திற் சே
ராதேயனல்தாழாதே, பேதமதுசெய்யாமற் பிலத்தி
ருந்தாற் பிராணனங்கேபிலத்திருக்கும்பிசகோவில்லை
நீதமதுதயபியேஐயத்கோடே நீர்வாதஞ்சேர்ந்துகிழ
நேரேயோடில், திதனவியாதியெலாஞ் செனிப்பித்
தோடுஞ் சிருடையவாதநிலைநாடிதேறே, ௨௩

நாடியுடவிதங்களெல்லாம்வாதவீட்டில் ஊடலா
டலையாதேநலமாய்ப்பாரு, தேடிவரும் நோய்களெல்
லாம்சாசாலைத்தான் சேர்ந்துநின்றுற்காணுமதுசெப்

பவேண்டாம், நாடிவரும்பித்தமதாசன்கீழே சமை ந்திருப்பான் தயிரியவானவத்தனல்ல, கொடியதவழு ண்டவர்க்குக்குற்றஞ்செய்தாற் கொடுமைசெய்தசீத த்தைஅழைப்பாரென்றே. உ௪

அழைத்துடனே அநுபவிப்பான்பித்தாச னது கேட்பான்சிதமது அம்புபோலே, களைத்துடனே வங் கிழுப்பான்கயிறுகட்டிக் கண்ணெல்லாமுழிபிரளக்கப ந்தான்வந்து, வளைத்துடனே அக்கினியும் விந்துதண் ணீர் மண்ணுங்கரைந்துவிடும்வகைதான்பாரு, இளைத் துடனேகூடுவிட்டேகும்பாரு இன்னமொருகுறியத னையியம்புவோமே. உ௫

இயம்புகிறேன்வாதமொடுபித்தங்கூடிலினிப்பா னதொந்திப்பென்றறியலாகும், நயம்பெறவேகிலேற் பனமுங்கூடித்தானால் நாட்டலாங்குடிலமென்றே நா ட்டலாகுஞ், சுயமபெறவேபித்தமதுவீழ்ந்துபோனா ற்கொல்லரிதுபேசாதேசுருக்கதாகும், இயம்புகிறேன கபம்வீழ்ந்தாலாறுமாதம் இனிதானசடலமதுயேகு ம்பாரே. உ௬

சடலமதுயேகிவிடும் வகைதான்கேளு சாற்றுகி றேன்வாதத்திலகிலையைப்பாரு, உடலமதாநடுநடுங்கி விறைந்துதானால் ஒன்பதாமாதத்திற் சாவாரென்றுங், கடலுமதுகலங்கிவிடுமபித்தாசன் கதித்திருந்துவீடு

விட்டுக்கபத்திற்சென்றால், நடலமதுகுறைந்துவிடு ம றுபதாநாளில்நாடுவிட்டுக்காடுபுகும்நடையைப்பாரே, நடையதுவேயறிந்தாக்கா லாறுதாம் நாள்தனி லேயறிவார்கள்நாதனவார், விடைதனிலே யேறிவரு ம்இவனுர்சொல்ல, வேதாந்தசுகமுனிவெளியிற்போ ட்டேன், கடைதனிலே யின்னமொரு குட்சஞ்சொல் வேன் கருத்தறியநாவதுவேரிளதாகி, விடைதனிலே யேழாநாள்சாவாரென்று இனிதானசுகமுனி யியம்பி னரே, உ௪

இயம்பினார்நாடிமெல்லா மிந்தநூற்குள்ளே, யி டையினொடும்பின்கலையுஞ்சுழிமுனையுமாகும், இயம் பினதுதானேவாதபித்தமையமிசைவாசக்காலசையு மொன் றுமாகு, மியம்பினரிப்படியேநடக்கும்போது இடுக்கங்களொன்றுமில்லையிருக்கலாகும், இயம்பினர் குடிலமதுதோன்றிற்சீதமெழும்பிணற்பிணிபலவுமெ ய்துந்தானே, உரு

தானென்றநாடிநிலையறியவேணுஞ் சதாகாலஞ் சாத்திரத்தைப்பார்க்கவேணும், ஊனென்றதத்துவங் கள்சரீரக்கூறும் உற்றுணர்ந்துபஞ்சபாதகங்கள்நீக்கி, தேனென்றமனோன்மணியாள் பாதந்தன்னைத் தினந் தோறுமயராமல்சேவித்தேற்றி, நானென்றஆணவங் காமமாய்கையற்று நல்லபரிசாரஞ்செய்நாடிமுற்றே,()

சுகமுனிநாடி - முற்றும்.

சிவமயம்.

ராஜாங்கநாடி உரு.

——(*)——

வாதமதுமுன்னெழுந்துதாழ்ந்துசற்றேமயிலது
போல்நடைநடந்து மங்குமாகில், சேதமதுஇல்லையெ
ன்பத்தாறுமாண்டிற் செப்பலாமரணமென்று நீக்க
ராக, நாதமதுகுறைந்துவிட்டில்போலேகண்டால் நா
ளெட்டில்மரணமென்றுநவிலலாகும், பேதமதுஇல்லை
யாதுபிசகாமற்பெரியவனுஞ்சூதமுனிபேசுங்காலே

காலானபித்தமதுதுடியேகண்டு கனலெழுந்துவ
ந்திடுகில்சிதமாச்சு, மாலாகிலும்பார்க்க மருந்துமில்லை
மரணமதுமூன்றுதிங்கள்வரிசையாகும், நாலானபிந்
தமதுவெங்கத்தொங்கி நடைநடந்துபாம்பதுபோல்
நடக்குமாகில், மேலானபதிமூன்றுந் திங்கள்தன்னில்
விறந்திருந்தகூடழியும்விரும்பிப்பாரே, ௨

பாரப்பாவயித்தியனே மரணநாடி பாக்குடனே
சொல்லுகிறேன்பாரின்மீது, சேப்பாசிதமதுசிலேற்
பனமாகுஞ் சிதறியேயானைபோல்நடந்ததானால், சு-
ரப்பாசாவுபதிறென்றுமாணூற் குறைபிலில்லை நவட

துபோல்நடந்ததானால், மாரப்பாநாள்வந்த தென்று
சொல்லி மருந்துகளையருந்தாமலிருந்திடடீர், ௫

இருந்திடவேயின்னமொருகுறிதான்கேளு இப
ல்பானவாதமதுகிழேநோக்கி, லருந்திடவேமேலேறி
நடக்குமாகி லப்பனேயன்பதுநாளாகுமென்ன, மரிந
திடவேபித்தமதுதொங்கிச்சற்றே மனரிநாக்குஅசை
வதுபோலசையுமாகில், சுரந்திடவேவிக்கமதுகழிச்ச
லாகிச சோர்வுடனேவைகுந்தஞ்சகமதாமே, ௬

ஆமடாகண்சிவந்து சுழித்துவாங்கி யறிவுகெட்டு
பதிமயங்கியோசைகுன்றிற்,போமடா ஆறுநாள்சீவன்
போகும் பேதமதுகின்றுசற்றேபேசுமாகில், நாமடா
பித்தமதுவிழிவில்லைநம்பரிதுவம்புவரும்நாடாதேகே
ள், சாமடாமூன்றுநாள்சிவன்போகும சக்கரமுமறுதி
யென்றேசாறலாமே, ௭

சாற்றுகிறேன்வாதபித்தசிலேற்பனமூன்று சங்
தங்கள்தப்பியேகொள்ளுமாகிற், வாழ்த்துகிறேன்சித
மதுவந்துதோன்றி வளர்ச்சிபொடுவிக்கல்வருங்குளிர்
ச்சியாகும், மேற்றுகிறேன்இளைப்புவருக்பேச்சோயி
ல்லை பித்தமாகவாதமதுவிழுந்துதென்றால, ஆற்றுகிறே

ன்இருபத்தொன்றுநாள்சாவான் ஆதியர்தம்பித்தமதைதஅறிந்துபாரே, ௬0

அறிந்துபார்ராசாங்கமையந்துள்ளே அறியாதபிள்ளைகளும்நாடிகாண்பார், பிறிந்துபார்பித்தமது அசைவுநின்றால் பேசரிதுமோகமதுமரணமாகும்,தெறிந்துபார்சிலேற்பனமும் அசைவுநின்றால் திரேகமதுயேகிவிடும்இருபதாநாள், குறிந்துபார்பித்தமொடுவாதக்கூடிலகுறிசொல்வார்ஏழாண்டிற்விறைந்துபோமே

குறைந்துபோம்வாதமொடு சிதக்கூடில் கூட்டியேமாட்டுவிராய்கூபத்தைதத்தானும், நிறைந்துபோமகபமே ளையிளைப்புமாகும் நெஞ்சடைப்புகாதடைப்புநிலேயேயில்லே, விறைந்துபோம்பித்தமதில்வாதஞ்சேரில் வலியுகுன்மம்வாந்தியொடு அன்னந்தள்ளுமம, உறைந்துபோய் இன்னமொருகுறியைச்சொல்வேன் உயிர்நிலேக்குவாதநிலே உரைக்கிறேனே, ௬௧

உரைக்கிறேன்வாதத்தில்சிதக்கூடில் உதிரவலிகொண்டுமிகஉடம்புவீங்கும், நிரைக்கிறேன்பதினுலில்மரணமாகும் மண்டைதனில்வெறியெழும்பிப் பிறவழியைப்பார்க்கும், அரைக்கிறமருந்துதனைச் செல்லவொட்டா தாக்கிரிதநுக் கொள்ளுமடா அறிந்துபார்கேளே, ௬௨

கோப்பாமூன்றுமிக அசைவுநின்றாற் கெடியா னவிரல்மூன்றின் றுடிப்புக்காணில், கோப்பா ஆசன த்திற்குடிகொள்ளும் நலமானமூத்திரமுஞ்சிறுத்துப் போகும், தாளப்பாபிராணவலியெரிவுண்டாந் தன்சி ரத்தில்வேர்வெழும்புவாயுவுமாகும், சூளப்பாமூலமி கவெளியிற்காணும் சுரங்காணுமசதியோடு சோபங் காணும். ௰

சோசமதுவெப்பமதுவந்துகாணும் சோத்தியங்க ளில்லையதுசுகமேயாகும், தாகமொடுவிக்கல்வந்தால் ரைக்கட்டிச் சஞ்சலத்தையுண்டாக்குமலத்தைக்கட் டும், வாதமொடுசீதமதுவந்துகூடும் வந்துவிடுமிளைப் புடனேயிருபதாநாள், பூதமதுகூடிவிட்டேகிப்போகு ம் பொய்யல்லாசாங்கம்புகழ்ந்திட்டேனே. ௰௧

புகழ்ந்திட்டேன்சன்னியென்றமூன்றுக்குள்ளே பூட்டினேன்சிலேற்பனத்தைப் புகழ்ந்துபாரு, இமுந் திட்டவாதபித்தம் பார்க்கவேண்டாம் இனிதானசட் லமெல்லாங்குளிர்ச்சியாகும், மகிழ்ந்திட்டேன்சிலே ற்பனத்தைப்பிரித்துப்பார்க்கில் மதித்தெழுந்த நாடி

டேறும்வாய்வயிறும், காரப்பாகிருணிபோல் தணலோ
கண்டு தட்டுமெதுமன்பதமேதோர்நாளியதானே. ௱௬

தானென்றசுயமிருமல்நாடிகாணச் சாற்றுகேறே
ன்பித்தபநிற்கிதங்கூடிற், கோனென்றசிரசுதனில்வி
ளைக்கொள்ளுங் குத்துடனேயிருமல்வருங் கோழை
காறுங், தேனென்றபிணைப்புவரும்ரத்தங்காறுங்கிரா
து ஆறுமதிசெப்பலாகும், ஊனென்றஉடம்புதனில்தீ
ராரோகம் உரைக்கிறேன்இன்னதென்றுமுந்திமுந்தி.

முந்தியதோர்பாதம்புறங்காலவீசமுகத்திலேவீ
ங்கமதுகண்டதானால், பித்தியதோஷகழிச்சலதுகிராணி
பாகுமபேதிசதுதிராதுதின்னமாக, அந்தாஷ்டேநிதப
யமிருமல்சாதகிப்பங்கிறணி ஆறுவாந்திராது அசாத்தி
யமதானே. ௱௭

அசாத்தியந்தான் சொல்லுகிறேன் ராஜாங்கத்தி
ல அறிந்திடவேயின்னதென்று அடைவாயகேளு,
அசாத்தியந்தான் நீர்க்கோவை சததிருன்மம் ஆன
தொருவலிகுன்மம்பேனிப்புத்து, அசாத்தியந்தான்
முனைநோவுலிங்கப்புத்து ஆனதொருதொண்டைதனி
ல்புற்றுமாகும், அசாத்தியந்தான்முசல்கிழுக்குஉள்ளி
ரோடு ஆராதிதிராதுஅறிந்துதானே. ௱௮

தானென்றுசலக்கழிச்சல்யோனிப்புத்தூ தலைத
ளிலேஉதிக்கெழுந்தபிளவைதானும், கானென்றுஉ
திரவலிசாகிநோயு கண்டிதமேகுயாகண்டன்நிராரோ
சம், தேனென்றகொடிதனிலைபவுத்திரங்கள் நிராது
இவ்வைபோன்றுசொல்லச்சேரு, பானென்றுஉளமாக
தையினையகொல்லா மகாவாதைபலவுமுடா வாத
நாடி. ௰௯

காடியுடவிதங்களெல்லாம் வாதவிட்டில் நாடடா
மலில்லையதைநலமாய்ப்பாரு, தேடிவரும்நோய்களெ
ல்லாமராசாவைத்தான் சேர்ந்துநின்றுல கானுமடா
செப்பலாகுா, ஆடிவரும்பித்தமதுராசன்கிழே அமா
ந்திருப்பான்தயிரியவான் அவனைப்பார்த்தாற், கோடி
தளமுண்டு அவர்குற்றஞ்செப்தாற் குணமாகுஞ்சிதம
தையழைப்பானென்றே. ௨௰

அழைத்துடனேயதுபவிப்பான்பித்தராசன் அ
துகேட்பான்சுபமானராசன்தானும்,கழைததுடனே
யெழுக்திருப்பான் அதன்றங்கேதான் கண்மூடிமுழி
குமுன்னெபிழைக்காமல்வந்து, வழைத்துடனே அ
னியும்விந்துகன்னில்வந்துமன்னுங்காத்துவிட

வாகுதான்பாரு, இறைத்துடனே கூடுவிட்டுயேகும் பாரு இன்னமொரு குறிபதனைப்பயப்பகேளே. ௨௧

இயம்புவேவாதமுடன்சிதங்கூடில் இயல்பாக த்தொந்திப்பென்றறியலாகும், நயமபெறவேஙசிலேற் பனாப்புங்கூடித்தாலால் நாட்டலாங்குடிலமென்றுநாட் டலைது, பயமபெறவேகபமவிருந்தால் ஆறுமாதம் சொல்லரிதுபேசரிதுசுருக்கதாகும், இயம்புகிறேன் பித்தபதுவிட்டாந்ததானால் இனிதானசடலமதுயேகு நாளே. ௨௨

சடலமதுபோகிவிடுமதனைக்கேளு சாற்றுகிறேன் வாதநதிலேயஞ்சோ, உடலமதுநடுநடுங்கு விளையல்கா று உத்தடனேநான்காமாதம்மரணமாவார், சடலம துகலங்கிவிடும்பிதநாசன், கதித்திருந்துவிடுவிட்டுக பத்திற்சேர்ந்தால் நடலமதுகுறைந்துவிடும்பிருபதாநா ள் நாடுவிட்டுக்காடுபுகும்நடையைப்பாரே. ௨௩

நடையதுவேயறிந்தாக்சாலாறுதாரம் நாள்தனி லேயறிவார்கள்நாதனுவார், விடைதனிலேயேறிவரு ப் சிவனார்சொல்லவேதாந்தாசமுனி வெளியில்போ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பொருளடக்கம்

பொருள் அகராதி.

முற்றிற்று.